விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 151 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 05 வெள்ளிக்கிழமை (19.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## கண்ணீரில் நனைந்தது
# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

### பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்பு






▷15

## தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும்வரை ஓயமாட்டோம்

### முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து

- தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையே வேண்டும்.
- தமிழர்களின் பண்பாட்டு உரிமையான நினைவுகூரலை யாரும் தடுக்க முடியாது.

06ம் பக்கம் பார்க்க

### தொல்லியல் திணைக்களத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

## கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரர் ஆலய முன்றலில் கவனயீர்ப்பு



(கிளிநொச்சி)
கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்லியல் சின்னங்கள் அடையாளப் ▷15

### முள்ளிவாய்க்கால் மண்ணில்

## பாலச்சந்திரன் நினைவுகள்



(முல்லைத்தீவு)
2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் மிகக் கொடூரமான முறையில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். ▷15

## 'வலி சுமந்த கதை பகிர்வோம்' மட்டக்களப்பில் நினைவேந்தல்



(மட்டக்களப்பு)
"முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்" எனும் தொனிப் பொருளில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர் ▷15



### சுழிபுரத்தில்

## கிணற்றில் விழுந்த யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை ▷15

## திருமலையில் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு

(திருகோணமலை)
திருகோணமலை சிவன் கோவிலுக்கு அருகில், நடத்த திட்டமிடப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை தலைமையக பொலிஸார் தாக்கல் செய்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

அமைதி மற்றும் பொது சுகாதாரத்தை சீர்குலைக்கும் வகையிலான எந்த [illegible] ▷15

### முள்ளிவாய்க்கால் நினைவாக

## சமாதான புறாக்கள்




▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின் நிதிச்சலுகை தொடர்பில் பரிசீலனை

## பல்கலை. விரிவுரையாளர்களிடம் ஜனாதிபதி



(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியதன் பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கோரும் நிதிச் சலுகைகள் உள்ளிட்ட வரப்பிரசாதங்கள் குறித்து அரசாங்கம் பரிசீலிக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சகல பல்கலைக்கழகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி கல்விசார் ஊழியர் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டதுடன், தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்து, பல்கலைக்கழகக் கட்டமைப்பை பேணுவது மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு வழங்கப்படக்கூடிய தீர்வுகளைக் கண்டறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்கு தேவையான வெற்றிடங்களை இனங்கண்டு அவற்றை நிரப்புவது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வருடாந்தம் பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் தற்போதுள்ள கல்வி வசதிகள் போதுமானதாக இல்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதைய நிதி ஒதுக்கீடு வரம்புகளை முகாமைத்துவம் செய்து பல்கலைக்கழகக் கட்டமைப்பின் வசதிகளை மேம்படுத்துவது குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், மருத்துவ பீடங்கள், பொறியியல் பீடங்கள் மற்றும் விஞ்ஞான பீடங்களின் வசதிகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தினார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆய்வுக் கொடுப்பனவை மீள வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி தீர்மானம் எட்டுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பில் தீர்மானம் எடுக்கையிலும் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்கையிலும் நவீன உலகிற்கு ஏற்ற வாறு முறையான ஆலோசனைகளைப் பெற வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது. (ம-7,9)

# யார் தலைவரானாலும் நானும் சிறீதரனும் ஒன்றாகவே பயணிப்போம்

## முள்ளிவாய்க்காலில் சுமந்திரன் எம்.பி

(முல்லைத்தீவு)

யார் தலைவராகினாலும் நானும் சிறீதரனும் ஒன்றாகவே இணைந்து பயணிப்போம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் முள்ளிவாய்க்காலில் வைத்து தெரிவித்துள்ளார்.

நேற்று 14ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு காலை 10:30 மணியளவில் முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தில் இடம் பெற்றிருந்த நிலையில் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறீதரன் ஆகியோர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை முடித்துவிட்டு வெளியேறிய போது இருவரும் ஒன்றாக வெளியேறுவதை பார்த்துக் கொண்டிருந்த யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் பேராசிரியர் சிவநாதன் உடன் நின்று கொண்டு நீங்கள் இருவரும் ஒன்றாகவே திரிகிறீர்கள் யார் தலைவராக போகிறீர்கள் என நளினத்துடன் வினவினார்

இதற்கு பதிலளித்த எம். ஏ சுமந்திரன் நாங்கள் இருவரும் யார் தலைவராகினாலும் ஒன்றாகவே பயணிப்போம் உங்களையும் எங்களுடன் வந்து சேருமாறு தானே கேட்டோம் சேர்ந்தால் உங்களிடம் தலைமையை தந்து விட்டு நாங்கள் செயல்படலாம் என்று? நீங்கள் வாறியல் இல்ல ஆனால் உங்கட கட்சியின் தலைவர் விக்னேஸ்வரன் ஐயா எங்களுடன் தானே வர போகின்றார் என கூறி அவ்விடத்தை விட்டு சென்றார்.(ம-7,9)

# கிளிநொச்சியில் நினைவேந்தல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் பகுதியிலும், ஏனைய சம்பவங்களிலும் உயிரிழந்த அத்தனை உயிர்களிற்கும் வணக்கம் செலுத்தும் குறித்த நிகழ்வு நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. நிகழ்வில் சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மத வழிபாடுகள் இடம்பெற்றது.

தொடர்ந்து சர்வ மத தலைவர்கள் பொதுச்சுடரை ஏற்றினர். தொடர்ந்து அனைத்து மதங்களையும் உள்ளடக்கி சிறுவர்கள் சுடரினை ஏற்றினர். அதன் பின்னர் கூடியிருந்த மக்கள் ஈகச்சுடர்களை ஏற்றி உயிரிழந்த அனைவருக்குமாக கண்ணீருடன் மலர் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,100)

# தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இடம்பெற்றது.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சைவ கிறிஸ்தவ மதகுருமார் கலந்து கொண்டு பொதுச்சுடரினை ஏற்றினர்.

தொடர்ந்து மெழுகுதிரி ஏந்தியவாறு மக்கள் அஞ்சலி செலுத்தினர். மத தலைவர்களினால் மலரஞ்சலி ஆரம்பிக்கப்பட்டு மலரஞ்சலியும் இடம்பெற்றது. தொடர்ந்து உயிரிழந்தவர்கள் நினைவாக மத பிரார்த்தனையும் இடம்பெற்றது.



குறித்த நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(ம-7,100)


யாழ்ப்பாணம் நல்லைம்பதி
சிங்காரவேலவன் சிவகாயத்திரி
சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்

யாழ்.மண்ணில் யுத்தத்தினால் இறந்தவர்களின்
அமாவாசை தின ஆத்மசாந்தி சிறப்பு பூஜை

19.05.2023

கிரியா விபரம்

| | | |
|---|---|---|
| திருவாசகமுற்றோதல் | - | அதிகாலை 4.00 மணி முதல் |
| ருத்ரஹோமம் | - | காலை 9.00 மணி ஆரம்பம் தொடர்ந்து விஷேட அபிஷேகப் பூஜை வழிபாடுகள் நடைபெறும். |
| மஹேஸ்வர பூஜை | - | ந.ப.12.00 மணி மஹேஸ்வர பூஜையில் கஞ்சி மற்றும் அன்ன தானம் வழங்கப்படும். |

குறிப்பு:- அடியவர்கள் யுத்தத்தினால் இறந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி நெய்தீபம் ஏற்றி தர்ப்பணம் செய்து மோட்ச சார்ச்சனை செய்து வழிபாடாற்றிக் கொள்ள முடியும்.

தெளிவே என் சிந்தனை
இவ்வண்ணம் – சிவாச்சார்ய இளவரசு
கலாநிதி இராஜஸ்ரீ சிவகமலராஜ் குருக்கள்
(மேற்படி தேவஸ்தானம்)

உபயம்:
சுதர்சன், கீதா குடும்பம் (UK) (15556)


# நினைவேந்தலை அனுஷ்டிக்க நளினிக்கு அனுமதி மறுப்பு

(சென்னை)

தமிழர் கட்சி சார்பில் தனுஷ்கோடியில் நடைபெற்ற மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ள நளினிக்கு பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்து விடுதலையான நளினி, நேற்று தனுஷ்கோடியில் இடம்பெறவிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு சென்றுள்ளார்.

இவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்ற நளினிக்கு பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை. அதை மீறி அந்த நிகழ்வில் கலந்து கொண்டால், தன் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்யப்படலாம் என அஞ்சி தனுஷ்கோடியில் அஞ்சலி நிகழ்வில் நடைபெறும் பகுதிக்குப் போகாமல் கடற்கரையில் சிறிது நேரம் இருந்து விட்டு சென்றுள்ளார்.

ஆனால் மாநில உளவுத்துறை மற்றும் பொலிஸார் முன்னிலையில் தமிழர் கட்சிசார்பில் பொலிஸார் அனுமதி இன்றி தனுஷ்கோடியில் மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# வசந்த முதலிகே கைது

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழகங்களின் அழைப்பாளர் வசந்த முதலிகே நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்திற்கு அருகில் நேற்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட மாணவர் போராட்டத்தின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் தீபங்களை ஏந்தியவாறு பல்கலைக்கழக மைதானத்தில் இருந்து கொழும்பு-கண்டி வீதியை நோக்கி பேரணியாக சென்றனர்.

இதன்போது பொலிஸாரின் பணிக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பெயரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.(ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்நீரில் குளித்த மண்ணை கண்ணீரால் கழுவிய உறவுகள்








(நந்திக்கடலில்...)
























(மன்னாரில்...)



(சாவகச்சேரியில்...)

(விசுவமடுவில்...)





(படங்கள்: தேவாந்தன், யோசப்நயன், சுபேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி டெல்லி கப்பிடல்ஸ் அபார வெற்றி

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் தரம்சாலாவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற பஞ்சாப் அணி பீல்டிங்கை தேர்வு செய்தது. முதலில் ஆடிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி, 20 ஓவர் முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 213 ரன்கள் குவித்தது. அதிரடியாக ஆடிய கப்டன் டேவிட் வார்னர், 31 பந்துகளில் 46 ரன்களும், பிருத்விஷா 38 பந்துகளில் 54 ரன்களும் விளாசி வலுவான அடித்தளம் அமைத்தனர்.

அதன்பின்னர் ரூசோ அதிரடியாக ஆடி ரன் குவித்தார். பந்துகளை பவுண்டரி, சிக்சர்களாக பறக்கவிட, அணியின் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது.

கடைசி வரை களத்தில் நின்ற ரூசோ, 37 பந்துகளில் 6 பவுண்டரி 6 சிக்சர் உட்பட 82 ரன்கள் குவித்தார். பில் சால்ட் 26 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து 214 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது.




இதில், அதிக பட்சமாக லியம் லிவிங்ஸ்டன் 48 ரன்களில் 94 ரன்கள் குவித்து ஆட்டமிழக்காமல் விளையாடினார். தொடர்ந்து, அதர்வா டைட் 55 ரன்களும், பிரப்சிம்ரன் சிங் 22 ரன்களும், சாம் குரான் 11 ரன்களும், ஷாருக்கான் 6 ரன்களும் குவித்தனர். கடைசி ஓவரில் களமிறங்கிய ராகுல் சஹார் ரன்கள் எடுக்கவில்லை.

இதன் முடிவில், பஞ்சாப் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 198 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது.

இதனால் டெல்லி அணி 15 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப்பை வீழ்த்தி வெற்றி பெற்றது. (4)

# 3 புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியது ஐ.சி.சி

## ஜூன் 1 ஆம் திகதி முதல் அமுல்



ஐ.சி.சி எனப்படும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் பல்வேறு விதிகளை அதிரடியாக மாற்றியுள்ளது. இதன் மூலம் போட்டி விறுவிறுப்பாக மாறும் என்று ஐ.சி.சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அதன்படி ஐ.சி.சி 3 விதிகளில் மாற்றம் செய்துள்ளது. மாற்றப்பட்ட ஐ.சி.சி விதிகள் ஜூன் 1 ஆம் திகதி முதல் அமுலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிகள் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பின் இறுதிப்போட்டிக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் களநடுவர் இனி சாப்ட் சிக்னல் அளிக்காமல் 3 ஆம் நடுவருடன் ஆலோசிக்க வேண்டும். வேகப்பந்து வீச்சாளரை எதிர்கொள்ளும் பட்ஸ்மேன்கள், ஸ்டம்புக்கு அருகில் உள்ள கீப்பர், பட்ஸ் மேனுக்கு அருகில் உள்ள பீல்டர்கள் தலைக்கவசம் கட்டாயமாக அணிய வேண்டும். ப்ரீ ஹிட் பந்தில் பந்து ஸ்டம்பில் பட்டாலும் இனி பட்ஸ்மேன்கள் ரன் ஓடலாம். அந்த ரன்கள் பட்ஸ்மேன் கணக்கில் சேரும். ஆகிய3 விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த 3 விதிகள் வரும் ஜூன் முதலாம் திகதி அமுலுக்கு வரும் எனவும், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்த விதிகள் பொருந்தும் எனவும் கூறப்பட்டுள்ளது. (4)

# பார்சிலோனா சம்பியன்



ஸ்பெய்னின் லா லீகா கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியன் பட்டத்தை லா லீகா சுவீகரித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற இஸ்பான்யோல் கழகத்துடனான போட்டியில் பார்சிலோனா 4:2 கோல்கள் விகிதத்தில் வென்றது.

இவ்வெற்றியுடன் 34 போட்டிகளில் மொத்தமாக 85 புள்ளிகளைப் பெற்ற பார்சிலோனா, லா லீகா சம்பியன் பட்டத்தை உறுதி செய்து கொண்டுள்ளது. அக்கழகத்துக்கு இன்னும் 4 போட்டிகள் எஞ்சியுள்ளன.

லா லீகா பட்டத்தை பார்சிலோனா 27 ஆவது தடவையாக வென்றுள்ளது.

2019 ஆம் ஆண்டின் பின்னர் அக்கழகம் சம்பியனாகியமை இதுவே முதல் தடவையாகும்.

நடப்புச் சம்பியன் றியல் மட்றிட் கழகம் இம் முறை 34 போட்டிகளின் முடிவில் 71 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளது.

இஸ்பானியோல் கழகத்தின் மைதானத்திலேயே இப்போட்டி நடைபெற்றது. போட்டியின் பின்னர் பார்சிலோனா வீரர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதை சகித்துக் கொள்ளாத இஸ்பானியோல் கழக ரசிகர்கள் மைதானத்துக்குள் புகுந்தனர். இதனால் பார்சிலோனா வீரர்கள் மைதானத்திலிருந்து அவசரமாக வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. (4)

# உலக ரக்பி அங்கத்துவத்திலிருந்து இலங்கை ரக்பி இடைநிறுத்தம்



இலங்கை ரக்பியானது உலக ரக்பி விதிகளை மீறும் வகையில் காணப்படுவதால் உலக ரக்பி அங்கத்துவத்திலிருந்து உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை ரக்பி சம்மேளனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ரக்பியின் ஒழுங்கற்ற நிர்வாகம் மற்றும் அரசியல் தலையீடு என்பவையே இந்த இடைநிறுத்தத்திற்கு முக்கிய காரணமாக அமைவதாக உலக ரக்பி பேரவை தெரிவித்துள்ளது.

எனினும் உலக ரக்பி பேரவை, ஆசிய ரக்பி, சர்வதேச கூட்டமைப்பு மற்றும் பிராந்திய சங்கம் என்பன இலங்கையில் ரக்பிக்கு குறைந்த பட்ச இடையூறு ஏற்படுவதை உறுதி செய்வதற்காக அனைத்து பங்குதாரர்களுடன் இணைந்து செயற்பட உடன்பட்டுள்ளதாக சர்வதேச ரக்பி பேரவை தெரிவித்துள்ளது.

நிர்வாகச் சிக்கல்களைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து பணியாற்றுவதே உடனடி முன்னுரிமையாகும்.

இந்நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இலங்கை விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகள் ஆசியாவில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்கேற்க முடியும் என ரக்பி பேரவை குறிப்பிட்டுள்ளது.

உலக ரக்பி மற்றும் ஆசிய ரக்பி ஆகியன அனைத்து பங்குதாரர்களுடனும் இணைந்து அவசரமாக செயற்பட்டு தற்போதைய முட்டுக்கட்டைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கையுடன் கூட்டங்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மாதம் முதல் வீட்டிலிருந்தவாறே கடவுச்சீட்டு பெறலாம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் முதல், பொதுமக்கள் தங்களுக்கான கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு பிரவேசிக்க வேண்டிய அவசியம் இல்லை என அதன் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, வெளிநாட்டு கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை, இணையத்தளம் ஊடாக அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அமைவான கட்டணம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின், வங்கிக் கணக்கில் வைப்பிலிடலாம்.

அத்துடன், பிரதேச செயலக காரியாலயங்களில், கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்ய முடியும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, மூன்று நாட்களின் பின்னர், பதிவுத் தபால் மூலம், விண்ணப்பதாரரின் வீட்டுக்கே, கடவுச்சீட்டு அனுப்பிவைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. இறைச்சிக்கடைகளுக்கான 01.06.2023-31.12.2023 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2023

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 19/05/2023 இல் இருந்து 25/05/2023 ஆம் திகதி பி.ப.3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-26/05/2023 காலை 10.00 மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 26/05/2023 காலை 10.30 மணிக்கு. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தை, இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 22/10/2022 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

2023 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை மீள் கேள்வி விபரம்

| தொ.இல | குத்தகை விபரம் | 2023 (யூன் - டிசம்பர்) ஆகக் குறைந்த மீள்கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி கோழி இறைச்சிக்கடை | 318,500.00 | 3,185.00 | 500.00 | 100.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 1 | உடுப்பிட்டிச். சந்தை கோழி இறைச்சிக்கடை | 131,400.00 | 1,314.00 | 500.00 | 100.00 |

**கணேசன் கம்ஸநாதன்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(C-6579)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர் திரு. வீ.சேந்தன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர். சபாபதிப்பிள்ளை**
**வீரகத்திப்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த இரங்கல்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் -1936.03.27 மறைவு-2023.05.11

(55554)

**பாடசாலைச் சமூகம்,**
**யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.**

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 1930 . 11 . 28



விண்ணில் 2023 . 05 . 18

வலம்புரிப் பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றும்
**திரு.செ.செல்வானந்தம்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி.விவேகவதி செல்வரத்தினம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்**
**வலம்புரிக் குடும்பம்.**

(இ)

## இராசிபலன்

19.05.2023
வைகாசி 05, வெள்ளிக்கிழமை
அமாவாசை முன்னிரவு 9.45 மணிவரை
பரணி முற்பகல் 7.53 மணிவரை

சுபநேரம்-5.52-7.22 மணிவரை
இராகுகாலம்-10.22-11.52 மணிவரை
கார்த்திகை விரதம், அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்- அத்தம்

**வளவன்**




சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.




புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, திருமண முயற்சிகள் முன்னேற்றம் தரும்.




கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எடுத்த விடயங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், எடுத்த காரியங்களில் தீவிரம் காட்டுவீர்கள்.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.




அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் நிறைவுக்கு வரலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.




சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, உடல் நலனில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வாகன சுகமுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலத்தை தள்ளிப்போடாதே தாமதங்கள் அபாயகரமானவை.**

## விடுதலை கிடைக்கும்வரை ஓயமாட்டோம்

# தமிழினப் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணையே வேண்டும்

## முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து

**(முல்லைத்தீவு)**

**சிங்கள பேரினவாத அரசு தமிழின அழிப்பின் இன்னொரு வடிவமாக போதைப்பொருள் பயங்கரவாதம், மத முரண்பாடுகள் என்பவறைத் தோற்றுவித்து வருகிறது. இதனால் தமிழினத்தின் வாழ்க்கை முறை போராட்ட வடிவமாக மாறிவருகிறது எனவே தமிழினத்திற்கு விடுதலை கிடைக்கும் வரை ஓயோம். எமது மக்களின் விடுதலை வேண்டிய கனத்த சுவாசத்திலும் புனித பூமியிலும் நின்று அவர்களின் கனவுகளை சுமந்து தொடர்ந்து பயணிக்க சத்தியம் செய்கிறோம் என முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**




மே-18 ஆன நேற்றைய தின முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பினால் வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடத்தினேலே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டதாவது,

சிங்கள அரசின் தமிழினப் படுகொலை வரலாற்றில் திட்டமிடப்பட்டு, முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்டு 14 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

எமக்கு முன்னே எம் உறவுகள் கொத்துக்கொத்தாக படுகொலை செய்யப்பட்ட கணங்கள். நினைவுகள் எம்மை விட்டு ஒரு போதும் நீங்கப்போவதில்லை. அவர்களின் கனவுகளைச் சுமந்த காற்றின் கனதியை சுவாசித்துக்கொண்டும். அவர்களின் குருதியால் சிவந்து போன புனித பூமியின் மீது நின்றுகொண்டும்தான் நாங்கள் நினைவேந்துகின்றோம். சத்தியம் செய்கின்றோம்

என்றுமில்லாதவாறு எம் தேசம் இன்று ஆயுதங்கள் அற்ற பெரும் போரை எதிர் கொண்டு நிற்கின்றது. இது நாளுக்கு நாள் விரிவடைந்து ஒவ்வொரு ஈழத் தமிழரின் வாசல் வரைக்கும் வந்து விட்டது. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புத் திணிப்பு பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளது.

சிங்கள தேசம் தனது படை பலத்தை ஒன்றுதிரட்டி எம் பூர்வீகத் தாயகத்தை மிகச் செறிவாக இராணுவமயப்படுத்தி வருகின்றது.

இராணுவமயமாக்கத்தின் நீட்சியாகவே போதைப்பொருள் பயங்கரவாதத்தை நோக்க வேண்டியுள்ளது. எம் தாயகத்தில் இளந் தலைமுறையினரை போதைக்கு அடிமையாக்குவதன் மூலம் ஆக்கிரமிப்பு அரசிற்கு எதிராக போராடுகின்ற விடுதலை மனநிலையில் இருந்து அவர்களை திசை திருப்புகின்றது. போதைப்பொருளை இலங்கை அரசு ஈழத்தமிழர்களுக்கெதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது.

எம் தாயகத்தில் மிக அண்மையில் அதிகரித்து வரும் மத முரண்பாடுகளையும், சாதிய சிந்தனையின் எழுச்சியையும், சிங்கள அரசின் அல்லது சிங்கள அரசிற்கு துணைபோகும் சக்திகள் கையிலெடுத்துள்ள உத்தியாகவே நோக்க வேண்டியுள்ளது.

ஈழத்தமிழ்த்தன்மையில் வாழுதல், போராட்ட வடிவமாக மாறி வருகின்றது:

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புவிசார் அரசியல் மிக முக்கியமானது. தற்போதைய பூகோள புவிசார் அரசியலின் செல் நெறி ஏக துருவ பேரரசு கட்டமைப்பு உருவாக்கத்திற்கான கள முனைப்புக்களை உள்வாங்கியிருக்கின்றது. ஏக துருவ பேரரசு தலைமைத்துவக் கட்டமைப்புக்கு, ஈழத் தமிழ் மக்களின் அயுத விடுதலைப் போராட்டம் தடையாக இருந்ததனால், ஆயுத போராட்டம் பல்தரப்புப் பங்காளிகளால் சிதைக்கப்பட்டது என்பது புதிய தகவல் அல்ல. ஏகதுருவ பேரரசு கட்டமைப்பை பிராந்திய ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் முன்னெடுப்பதற்கு ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையும், தமிழ்த் தேசியக் கோரிக்கையும் தொடர்ந்தும் சவாலாகவே இருக்கப்போகின்றது.

பூகோள, பிராந்திய பேரரசு கட்டமைப்பு முயற்சிகளைக் கையாள்வதில்தான் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் இராசதந்திர பலம் தங்கியிருக்கின்றது. இனப்பிரச்சினைத் தீர்வில் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளும், கோரிக்கைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம். அவையாவன,

1. நினைவுகூரல் என்பது அடிப்படைஉரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஆகவே சிறிலங்கா அரசு ஈழத் தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒரு போதும் தடுக்க முடியாது.

2. தமிழ் மக்கள் எப்போதும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள் உட்பட சிங்கள பௌத்த பேரினவாதம் தமக்கெதிராக தொடரும் இனவழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணையையே கோரி நிற்கின்றார்கள். அதற்குக் குறைவான எதையும் நாங்கள் ஏற்கப் போவதில்லை.

3. தமிழர் தாயகத்தை வல்வளைப்புச் செய்யும், தாயகத்தில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைப் பலவீனமாக்கும் எந்த முயற்சியையும் சிங்கள பௌத்த பேரினவாதம் எம்மீது தொடுத்துள்ள இனவழிப்புப் போரின் ஒரு அங்கமெனவே நாங்கள் எப்போதும் கருதுகின்றோம்.

4. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்குரியவர்கள் என்பதையும், தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்.

5. பல்தேசிய சனநாயக முறைக்கூடு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும், என்பனவாகும்.

தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரையும் ஓயோம். எமது மக்களின் விடுதலை வேண்டிய கனத்த சுவாசத்திலும், புனித பூமியிலும் நின்று அவர்களின் கனவுகளைச் சுமந்து தொடர்ந்து பயணிக்க சத்தியம் செய்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## "சமகால இலக்கிய முயற்சிகள்" ஆய்வரங்கு - 1 வெளியீடு

(கிளிநொச்சி)

காவேரிக் கலாமன்றம் மற்றும் தமிழியல் ஆய்வு நடுவகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் "சமகால இலக்கிய முயற்சிகள்" ஆய்வரங்கு -1 எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கண்டி வீதி, மாவட்டசெயலக திறன் விருத்தி நிலையத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாவட்ட செயலாளரும் பண்பாட்டு பேரவைத் தலைவரான திருமதி. றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)



யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது.

(படம்: சிவசாந்தன்)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் தாதியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்புப் பட்டம் (BSc Honours in Nursing), மருந்தாக்கவியல் இளமாணி சிறப்புப் பட்டம் (Bachelor of pharmacy Honours), உளவியல் இளமாணி சிறப்புப் பட்டம் (Bachelor of Science Honours in Psyxhology), மருத்துவ ஆய்வுக்கூட விஞ்ஞான மாணி சிறப்புப்பட்டம் (Bachelor Medical Laboratory Science Honours), ஆகிய் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்த 15.06.2023 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை நினைவுகூர ஒன்றுகூடிய பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள்




(லண்டன்)

ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு வெஸ்ட் மின்ஸ்டர் மாளிகையில் நேற்று ஒன்று கூடி இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுப் புத்தகத்தில் கையொப்பமிடுதல், காணொளி காட்சிப்படுத்தல் மற்றும் கண்காட்சி இடம் பெற்றது. கன்சர்வேட்டிவ், லேபர், லிபரல் டெமாக்ராட்ஸ் மற்றும் ஸ்காட்லாந்து தேசியக் கட்சியின் எம்.பிக்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் ஒன்று கூடி உள்நாட்டுப் போரின் போது இலங்கை அரசின் கைகளில் உயிரிழந்த அப்பாவிப் பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நினைவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டதன் மூலம், குற்றவாளிகள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று நடந்த அட்டூழியங்களுக்கு நீதியை உறுதி செய்வதில் தங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர். (நி)

# கொழும்பு பொரளையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பரபரப்பு

## கலகமடக்கும் பொலிஸார் குவிப்பு

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 14 வருட நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை கொழும்பு பொரளைப் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மற்றுமொரு குழுவினர் பதாதைகளை ஏந்தியவாறு நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை குழப்பும் முகமாக செயற்பட்டனர்.

இதன் போது 'புலிகளின் நினைவேந்தல் வேண்டாம்' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை காணமுடிந்தது.

இதையடுத்து குறித்த பகுதியில் பதற்ற நிலை அதிகரித்த நிலையில், பொலிஸார் குவிக்கப்பட்டனர்.



வடக்குகிழக்கில் இடம் பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளிற்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் கொழும்பில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் இடம்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இனப்படுகொலை இடம்பெற்றதற்கான இரத்த சாட்சியமே முள்ளிவாய்க்கால்

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

(லண்டன்)

தமிழர் வரலாற்றில் முக்கிய கூட்டு நினைவாக அமையும், மே 18 துயர் தினத்தை நினைவு கூர்வதும், அஞ்சலி செலுத்துவதும் ஈழத்தமிழர்களின் கட்டாயக் கடமையாகும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

14 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பல்லாயிரக்கணக்கான மக்களை, மாவீரர்களை, தமிழர் தேசங்களை இழந்த துயர்தோய்ந்த நாள். ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களம் புரிந்த இனப்படுகொலையின் இரத்த சாட்சியம் இந்த முள்ளிவாய்க்கால்.

நமது மக்கள் வாழ்வே போராகவும், போரே வாழ்வாகவும் வாழ்பவர்கள். எந்த ஒரு நெருக்கடியிலும் எமது விடுதலை வேட்கை குறையாமல் தமிழீழ மண் மீட்பில் தொடர்ந்து பயணித்தவர்கள். இன அழிப்பின் பின்னரும் எமது இறைமையை மீட்பதற்கு உரிமைக்குரல் எழுப்பி வருபவர்கள். தமிழர் தேசத்தின் விடுதலைக்காக ஆகுதியானவர்களையும், மக்களையும் மனதில் நிறுத்தி உறுதிபூணும் நாளிது.

எனவே முள்ளிவாய்க்கால் இனவழிப்பில் தம்முயிர் ஈந்தவர்களின் நினைவுடன், தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து ஓயாது உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்" - என அவர் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கு மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கிய பிரேசில்



(கொழும்பு)

பிரேசிலிய கூட்டுறவு முகவரகம் மூலம் பிரேசில்அரசாங்கம், ஒரு தொகை மருத்துவப் பொருட்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. .

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் இலங்கைக்கான பிரேசில் தூதுவர் செர்ஜியோ லூயிஸ் கேனஸிடம் இருந்து வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்த மருத்துவப் பொருட்களை நன்கொடையாகப் பெற்றுக் கொண்டார். (நி)

# ஆயிரக்கணக்கான சிறுகதைகளை தோற்கடித்து முதலிடம் பெற்றுள்ள 'கிளிநொச்சி' சிறுகதை

(வெலிங்டன்)

கிளிநொச்சி என பெயரிடப்பட்டுள்ள சிறுகதை சர்வதேச பரிசுக்காக போட்டியில் 56 உறுப்பு நாடுகளின் 6,641 சிறுகதைகளை முறியடித்து முதலிடம் பெற்றுள்ளது.

நியூஸிலாந்தின் ஒக்லாந்தில் வசிக்கும் குடும்ப மருத்துவரான ஹிமாலி மெக்கின்ஸ், என்பவரின் இந்த சிறுகதை, பசுபிக் பிராந்தியத்திற்கான பொதுநலவாய சிறுகதை பரிசை வெற்றி கொண்டுள்ளது.

ஒரு தாய், தமது மகனை தேடும் கதையே இந்த சிறு கதையில் இடம்பெற்றுள்ளது. இந்த சிறு கதையில் ஹிமாலி மெக்கின்ஸ், இலங்கையின் மலையக தமிழர், கிளிநொச்சி நியூசிலாந்து மற்றும் இலங்கை, தமிழ் மற்றும் சிங்களம், குடும்ப விசுவாசம், பாலினம், வர்க்கம் மற்றும் சமூக சமத்துவமின்மை, போர், புலம்பெயர் வாழ்வு மற்றும் நமது அடிப்படைத் தேவை ஆகியவற்றை ஆராய்ந்துள்ளார்.

நீண்ட ஒப்பந்தத் தொழிலாளர்களின் வரிசையில் இருந்து வரும் மலையகத் தமிழ் தேயிலை பறிக்கும் தொழிலாளியான நிஷாவைப் பற்றிய கதையே இந்த சிறுகதையில் இடம்பெற்றுள்ளது.

அவர் ஒரு நியூசிலாந்தரை மணந்து தனது மகனுடன் அங்கு செல்கிறார் - பின்னர் அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆயுதம் ஏந்துவதற்காக இலங்கைக்கு திரும்புகிறார். பின்னர் தனது மகனை கண்டுபிடிக்கும் ஆசையில், வட இலங்கையின் கிளிநொச்சியில் உள்ள போர்ப் பகுதிக்குள் செல்கிறாள்.



ஆயிரக்கணக்கான சிறுகதைகளைத் தோற்கடித்து முதலிடம் பெற்றுள்ள இச் சிறுகதை எழுத்தாளர் தமது வாழ்நாளின் பெரும்பகுதியை இலங்கைக்கு வெளியே வாழ்ந்திருந்தாலும், 2007 - 2009 வரை கொடூரமான உள்நாட்டுப் போரின் கடைசிக் கட்டத்தில் இலங்கையில் பணிபுரிந்தபோது எத்தனையோ அட்டூழியங்கள், ஆறாத காயங்களை சந்தித்ததாக எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலக்கிய இதழான "கிளிநொச்சி" விரைவில் இணையத்தில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில்
பிரதி அதிபராக கடமையாற்றிய
தேசமான்ய
ப.கமலதாசன்
[JP, SLPS, BA(cey), MEd(Hons),PGDE, PGDM, Dsm (mer), Spl trd Com, MA(ECO) LLB(final)]
அவர்கள் யா/ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தின் அதிபராக கடமையை பொறுப்பேற்றுள்ள இவ்வேளையில்
அவரது பணி சிறக்க வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்-
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்..
(16546)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# செங்குத்து விவசாயம்

# எதிர்கால உணவுப் பாற்றாக்குறைக்கு தீர்வாகுமா?

**அறிமுகம்**

விவசாயத்தின் மூலமாகமனிதன் தனக்குத் தேவையான உணவையும் ஏனைய பயன்களையும் பெற்றுக் கொள்கின்றான். விவசாயம் செய்வதற்குநிலம், வளமான மண், நீர், சூரிய ஒளி மற்றும் சாதகமான காலநிலை அத்தியாவசியமானது. ஆனால் அதிகரித்து வரும் சனத்தொகை மற்றும் நகரமயமாக்கல் காரணமாக விவசாயம் செய்வதற்கு தேவையான நிலம் குறைவடைந்து வருகிறது.

மேலும் வளமற்ற மண், நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக நீண்ட காலமாக பயன்பாட்டில் இருக்கும் மண்ணை நம்பிய விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது. இதனால் மாற்று விவசாய முறைகளை நாடவேண்டிய தேவை எழுந்துள்ளது. அந்த வகையில் சமீபகாலமாக உலகளவில் பிரபலமாக பேசப்படும் மாற்று வழிமுறையாக உருவாகியிருப்பது Vertical farming என அழைக்கப்படும் செங்குத்து விவசாய முறை.

**செங்குத்து விவசாய முறை என்றால் என்ன?**

இது ஒரு மண்ணில்லா விவசாய முறையாகும். அதாவது இங்கு பயிர்கள் மண் ஊடகத்திற்கு பதிலாக நீர் ஊடக வளர்ப்பில் (Hydroponics) அல்லது வளி ஊடகவளர்ப்பில் (Aeroponics) வளர்க்கப்படுகின்றன.

வெளிச் சூழல் மற்றும் காலநிலைத் தாக்கங்களிலிருந்து தனியாக்கப்பட்ட ஒரு பெரிய அறையினுள் ஒன்றன் மீது ஒன்றாக பல தட்டுக்கள் /அடுக்குகளைக் கொண்ட அலுமாரிகளின் ஒவ்வொரு தட்டிலும் மண்ணின்றி வளர்க்கப்படும் பயிர்கள். இவ்வாறே செங்குத்து விவசாய முறையின் அமைப்பு காணப்படுகிறது.

தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான காரணிகள் குறித்த தாவர வகைக்குத் தேவையான அளவில் கட்டுப்படுத்தி வழங்கப்படுகின்றன. பெரும்பாலும் சூரிய ஒளிக்குப் பதிலாக LED மின்குமிழ்கள் பயன்படுத்தப்படுகின்றன. காலநிலையின் செல்வாக்கு இல்லை.

**செங்குத்துவிவசாய முறை ஏன் தேவைப்படுகின்றது?**

இதற்குப் பிரதான காரணமாக அதிகரித்துவரும் சனத்தொகை அமைகின்றது. சனத்தொகை அதிகரிக்கும் போது கட்டடங்களுக்கான தேவையும், உணவுக்கான தேவையும் அதிகரிக்கும். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கும் நிலத்தை குடியிருப்பு அமைக்க பயன்படுத்தும் போது விவசாயத்திற்கான நிலம் குறைவடைகிறது.

மண்ணை நம்பிய விவசாயத்திற்கு அதிக நீர் தேவைப்படுகின்றது. விவசாயத்தின் போது பயன்படுத்தப்படும் இரசாயன



உரங்கள், கிருமி நாசினிகள், மற்றும் களை கொல்லிகள் காரணமாக நீர் மாசடைவதுடன் மண் வளமும் குறைவடைகின்றது. புவிவெப்பமாதலால் அதிகரித்துள்ள காலநிலை மாற்றங்களாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பயிர்கள் அழிவடைகின்றன.

எதிர்காலச் சந்ததியின் இருப்பை உறுதிசெய்வதற்கு இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை அத்தியாவசியமாகிறது. இவை அனைத்திற்கும் தீர்வாக முன்வைக்கப்படுவது செங்குத்து விவசாயமுறை ஆகும்.

**செங்குத்து விவசாய முறை ஏன் சிறந்த தீர்வாக கருதப்படுகிறது.**

பல அடுக்குகளில் பயிர் செய்யப்படுவதால் குறைந்த இடத்தில் அதிக உற்பத்தி. மண் ஊடகத்திற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் நீர் ஊடக வளர்ப்பு முறையில் நீர் மீள் சுழற்சி முறையில் பயன்படுத்தப்படும் போது மிகமிகக் குறைந்த அளவு நீரே தேவைப்படுகிறது.

வளி ஊடக வளர்ப்பு முறையில் நீரானது நேரடியாக தாவரங்களின் வேர்களுக்கே விசிறப்படுவதால் சாதாரணமான மண் விவசாய முறைக்குத் தேவையான நீரின் 5 சதவீதமான நீரே பயன்படுத்தப்படுகிறது. காலநிலையின் தாக்கத்தினால் விளைச்சல் பாதிக்கப்படாது.

வருடம் முழுவதும் விளைச்சலைப் பெறலாம். உள்ளகச் சூழலில் வளர்க்கப்படுவதால் இரசாயன உரங்கள் மற்றும் கிருமி நாசினிகளின் பாவனை இல்லை என்பதால் சூழல் மாசடைவது குறைவடைகிறது. மண்ணின்றிய விவசாயம் என்பதால் களைத் தாக்கங்கள் இல்லை,

**செங்குத்து விவசாய முறையில் காணப்படும் பிரச்சினைகள்.**

மிகக் குறைந்த அளவிலான பயிர்வகைகளையே செங்குத்து விவசாய முறையில் வளர்க்க முடியும். குறிப்பாக பெரும்பாலான மரக்கறிப் பயிர்கள், நெல், கோதுமை போன்ற தானிய வகைகளை வளர்க்க முடியாது. செங்குத்து விவசாய முறையை அமைப்பதற்குத் தேவையான ஆரம்ப மூலதனம், பராமரிப்பு செலவு என்பன மிக அதிகம். மொத்தக் கட்டமைப்பையும் இயங் கச் செய்வதற்கு அதிகமின் வலு தேவைப்படுகிறது. அத்துடன் முழுவதுமாக தொழில்நுட்பங்களில் தங்கியிருப்பதால் சிறிய பிழை அல்லது மின் துண்டிப்பு போன்ற காரணிகளால் முழுக் கட்டமைப்புமே செயலிழந்துவிடும் அபாயமும் உள்ளது.

எப்படியிருப்பினும் செங்குத்து விவசாய முறைதான் அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாக உருவாகும் உணவுக்கான கேள்வியை ஈடுசெய்ய தற்போது இருக்கும் மாற்று வழி எனக் கருதப்படுகிறது.

செங்குத்து விவசாய முறையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இன்னமும் வினைத்திறனான முறையில் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான ஆய்வுகளும் பரீட்சார்த்த முயற்சிகளும் உலகெங்கிலும் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

இம் முயற்சிகள் மூலமாக எதிர்காலத்தில் ஏற்படப் போகும் உணவுப் பற்றாக்குறையை செங்குத்து விவசாய முறை தீர்க்கும் என்று நம்புவோம்.

**துளசிகா உருத்திரேஸ்வரன்**
**செயன்முறை வழிகாட்டுநர்,**
**தாவரவியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 142

## தொழிலில் நஷ்டம் அடைந்தவருக்கு இலாபம் ஈட்டிக்கொடுத்த காசோலை

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்தார் அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தவர். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு "ஏன் சோகமாக இருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு இவர் "எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன் " எனக்கூற. "எவ்வளவு ரூபாய் நஷ்டம்?" என்றார் அந்தபெரியமனிதர் "50 கோடி ரூபாய்" எனக்கூற . "அப்படியா, நான் யார் தெரியுமா?" என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரைச் சொன்னார். அசந்து போனார் நிறுவனத்தின் தலைவர்.

"சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?" என்று கேட்க அவர் உடனே முகமலர்ச்சியுடன் "ஆமாம் எல்லாம் சரியாகி விடும்" என்றார். பின் அந்த செல்வந்தர் ஒரு காசோலைப் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி "இந்தா இதில் 500 கோடிக்கு காசோலை நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்" என்று சொல்லி விட்டு காசோலையை கொடுத்து விட்டு சென்றுவிட்டார்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்று தன் அறைக்குள் சென்று அந்த காசோலையை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

அந் நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். "நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது. ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் ஏதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டுப் பிடிக்கபட்டு களையப்பட்டன. மிக ச்ரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு மூச்சு செயல் சிந்தனை தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலை பற்றியே இருந்தது.

மிக சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிக சரியா 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான காசோலையை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே பெஞ்சில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரை காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?" எனக் கேட்க அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் "உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?" என்றார் இவர் "இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?" என்றார். அந்த பெண்மணி "இல்லை அய்யா அவர் ஒரு பைத்தியம் அதாவது மனநிலை சரி இல்லாதவர், காசோலை தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய காசோலையைக் கிழித்து கையழுத்திட்டு கொடுத்து விடுவார்" என்றார். ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேசமுடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.

நம்மால் எதையும் செய்ய முடியும் என்று முதலில் நாம் நம்பவேண்டும். அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பட்டு Valampurii Seitny எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தனுஷ்கோடியில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு



(சென்னை)

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி தனுஷ் கோடி அரிச்சல் முனையில் தமிழர் கட்சி சார்பில் அனுசரிக்கப்பட்டது.

மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையொட்டி தமிழர் கட்சிசார்பில் அக்கட்சியின் மாநில செயலாளர் தீரன் திருமுருகன் தலைமையில் குழந்தைகள் உட்பட ஏராளமானோர் தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் உருவப்புகைப் படத்தை தெர்மாகோல் மூலம் உருவாக்கப்பட்ட படகில் வைத்து கடலில் விடப்பட்ட பின்னர் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த ஈழத்தமிழர் நினைவாக கோஷங்கள் எழுப்பிய தோடு, ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பி தங்களுடைய கண்டனத்தை பதிவு செய்தனர். (நி)

## மே-18 இறுதி நாள் நிகழ்வு யாழ். பல்கலையிலும் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை வாரத்தின் இறுதி நாள் அஞ்சலி நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தூபியில் இடம்பெற்றது.

இதன் பொழுது பொதுச்சுடர் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராமினால் ஏற்றிவைக்கப் பட்டது. (நி-33)

# இந்தியப் பெருங்கடலில் விபத்திற்குள்ளான சீனக்கப்பல்

## 39 மீனவர்களை தேடும் பணி தீவிரம்

(பீஜிங்)

சீனாவுக்கு சொந்தமான மீன்பிடி கப்பல் ஒன்று இந்தியப் பெருங்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தென் ஆப்பிரிக்காவில் இருந்து புறப்பட்ட இந்த கப்பல் சீனாவை நோக்கிச் சென்ற போது இந்தியப் பெருங்கடலின் மையப் பகுதியில் திடீரென கவிழ்ந்து மூழ்கியது.

அந்த கப்பலில் சீனாவை சேர்ந்த 17 மீனவர்கள், இந்தோனேசியாவை சேர்ந்த 17 மீனவர்கள் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டின் மீனவர்கள் 5 பேர் என 39 பேர் இருந்தனர். அவர்கள் அனைவரும் மாயமாகி உள்ளனர். இதனிடையே மாயமானவர்களை தேடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு மீட்பு குழுக்களுக்கு சீன ஜனாதிபதி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சர்வதேச கடல் சார் மற்றும் மீட்பு உதவிகளை நாடி சீன ஜனாதிபதி அழைப்பு விடுத்ததை அடுத்து, அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளின் கடற்படைகள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (நி)

# ஏழு உலக அதிசயங்களையும் ஏழே நாளில் சுற்றிப் பார்த்த சாதனையாளர்

(லண்டன்)


சிலர் வழக்கத்திற்கு மாறான செயல்களை செய்து தனக்கென ஒரு தனி அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்வதுடன், உலக சாதனைகளை ஏற்படுத்துகின்றனர். அந்த வகையில் பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர் உலகின் ஏழு அதிசயங்களையும் ஒரு வாரத்திற்குள் சுற்றிப் பார்த்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். ஜேமி மெக்டொனால்ட் என்ற அந்த நபர் ஏழு நாட்களில் உலகின் அனைத்து அதிசயங்களையும் பார்வையிடும் சவாலை ஏற்று வெற்றிகரமாக முடித்துள்ளார். முதலாவதாக சீனாவில் உள்ள பெருஞ்சுவரை பார்வையிட்டார். அதன்பின்னர் இந்தியா வந்து தாஜ்மஹாலை பார்த்தார். ஜோர்டானில் உள்ள பெட்ரா நகரம், ரோமில் உள்ள கொலோசியம், பிரேசில் நாட்டில் உள்ள மீட்பர் கிறிஸ்து சிலை, பெருவில் உள்ள மச்சு பிச்சு, மெக்சிகோவில் உள்ள சிச்செனிட்சா இட்சா ஆகியவற்றை பார்வையிட்டார். இந்த ஏழு அதிசயங்களையும் சரியாக 6 நாட்கள், 16 மணி நேரம், 14 நிமிடங்களில் அவர் பார்வையிட்டுள்ளார். இந்த சாதனையை செய்து முடிக்க அவர் 13 விமானங்கள், 9 பேருந்துகள், 4 ரெயில்கள், 16 டாக்சிகள் மற்றும் ஒரு டோபோக்கன் ஆகியவற்றை பயன்படுத்தி 4 கண்டங்களில் மொத்தம் 36780 கி.மீ. பயணம் செய்திருக்கிறார். மெக்டோனால்டின் இந்த சாதனைப் பயணத்திற்கு டிராவல் போர்ட் என்ற நிறுவனம் ஆதரவு அளித்தது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுகளின் எண்ணிக்கையை 30 ஆக மட்டுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

அமைச்சுக்களின் எண்ணிக்கையை 30 ஆக மட்டுப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் புதன்கிழமை அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் மாகாண செயலாளர்களுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் கொள்கை ரீதியான திட்டங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் மாகாண செயலாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

முடங்கிப் போன பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்மொழிந்திருக்கும் வேலைத்திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்தினால் சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள இலக்குகளை குறுகிய காலத்தில் அடைய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சகலரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கடந்த கால தவறுகளை திருத்திக்கொள்ள முடியுமெனவும், பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின் சில அரச நிறுவனங்களை மறு சீரமைக்க வேண்டியது அவசிய மெனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிகாட்டியுள்ளார். (நி)

# இலங்கையில் தீவிரம் அடையும் கொவிட் 20 நாட்களில் 16 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொவிட் தொற்று காரணமாக கடந்த 20 நாட்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த தகவல்களை தொற்று நோய்ப் பிரிவு வெளியிட்டுள்ளது. கடந்த 20 நாட்களில் சுமார் 170 தொற்று உறுதியாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி மூன்று பேர் கொவிட் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்பதுடன் கடந்த 6 மற்றும் 16ஆம் திகதிகளில் ஒரே நாளில் தலா 13 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

உயிரிழந்த 16 பேர் நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## தென் கடற்பரப்பில்

# பெருமளவு போதைப்பொருட்களுடன் ஆறுபேர் கடற்படையினரால் கைது

(கொழும்பு)

தென் கடற்பரப்பில் பெருமளவிலான போதைப் பொருட்களை ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடிக் கப்பலுடன் 6 சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரும் இலங்கை கடற்படையினரும் இணைந்து நடத்திய விசேட நடவடிக்கையின் மூலம் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட தேடுதல் நடவடிக்கையில், பெருமளவிலான போதைப்பொருட்களை ஏற்றிச் சென்ற பலநாள் மீன்பிடி கப்பலுடன் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# கொஸ்லந்தையில் கஞ்சா செடிகள் விசேட அதிரடிப் படையினரால் அழிப்பு



(கொழும்பு)

கொஸ்லந்தை பொலிஸ் பிரிவிலுள்ள பலஹருவ பிரதேசத்தில் கஞ்சா செடிகள்பயிரடப்பட்ட காணி ஒன்றினை நேற்று முன்தினம் புதன்கிழமை ஹப்புத்தளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு கஞ்சா செடிகளை மீட்டு அழித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை குறித்த பிரதேசத்திலுள்ள கஞ்சா செய்கை செய்யப்பட்ட காணியை விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு அங்கு 15 பேச் நிலப்பரப்பில் பயிரடப்பட்ட 6 அடி உயரம் கொண்ட 225 கஞ்சா செடிகளை பிடிங்கி அழித்ததுடன் அதில் ஒரு பகுதியை சட்டநடவடிக்கைக்காக ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# வைகாசி மாத இராசி பலன்கள் 15.05.2023-15.06.2023

## சிம்மம்

**மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களைச் செய்து முடிக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைக் குரு பகவான் பார்க்கிறார். எனவே இம்மாதம் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறப்போகிறது. கண்டகச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும், கற்பனை செய்து பார்க்க முடியாத் அளவிற்கு தொழில் நடைபெறும். காரணம் குருவின் பார்வைதான். பஞ்சம அஷ்டமாதிபதியான குருவின் பார்வைக்கு பலன் அதிகம் உண்டு.

**ராகு-கேது சஞ்சாரம்**

பின்னோக்கி நகரும் கிரகங்களான ராகு-கேதுக்கள் உங்கள் வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல வழிகாட்டும். பாக்கிய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். அவர் குருவோடு இணைந்திருப்பதால் அனைத்து யோகங்களையும் வழங்குவார். அதே சமயம் 3-ல் சஞ்சரிக்கும் கேதுவையும் குரு பார்க்கிறார். குரு பார்வை காரணமாக கேது சஞ்சரிக்கும் ஸ்தானமும் புனிதமடைகிறது. எனவே இடையூறு சக்திகள் அகலும். சகோதரர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும். நிலுவையில் இருந்த வழக்குகளில் நீங்கள் நினைத்தது போல் தீர்ப்பு கிடைக்கும். எதிர்பாராத தன லாபங்கள் வந்து இதயத்தை மகிழ்விக்கும். உத்தியோகத்தில் சம்பள உயர்வுடன் கூடிய வேலை கிடைத்து நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைக்கப்போகிறது.

**கடக - சுக்கிரன்**

வைகாசி 16 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோக"த்தை உருவாக்குகிறார். தொழில் ஸ்தானாதிபதியான சுக்கிரன் விரய ஸ்தானத்திற்கு வருவதால், தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கும். "எவ்வளவு உழைத்தாலும் வியாபாரத்தில் அதற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே" என்று நினைத்து, புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். பொருளாதார தட்டுப்பாடு அகலும். என்றாலும் ஒருதொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகைகைக்கு கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு திடீரென பொறுப்புகள் மாறலாம். "மக்கள் செல்வாக்கு அதிகரிக்க என்ன செய்யலாம்" என்று யோசிப்பீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

**ரிஷப - புதன் வைகாசி**

18-ஆம் திகதி, ரிஷப இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு தன - லாபாதிபதியான புதன், சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். இது ஒரு பொற்காலமாகும். எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தொழில் வெற்றி நடைபோடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வும், பதவி உயர்வும் கிடைக்கும். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். வெளிநாட்டில் உள்ள நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி பெறுவீர்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் எளிதில் கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு லாபம் திருப்தி தரும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். கலைஞர்களுக்கு கௌரவம், அந்தஸ்து கூடும். மாணவர்களின் கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். துணிவும், தன்னம்பிக்கையும் உயரும். கணவன் - மனைவி உறவில் கனிவும், பாசமும் கூடும். பணிபுரியும் பெண்களுக்கு பரிசீலனையிலிருந்த பதவி உயர்வு கிடைக்கும்.

## கன்னி

**நிதானமே நிம்மதியை வழங்கும் என்று சொல்லும் கன்னி இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும் என்பார்கள். அதே நேரத்தில் குருவினுடைய பார்வையும் தன ஸ்தானத்தில் பதிகின்றது. எனவே பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நிறைவேறாத ஒரு சில காரியங்கள் நிறைவேறி நிம்மதியை வழங்கும். இடமாற்றம், வீடு மாற்றம் எதிர்பார்த்தபடி அமையும். அடகுவைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு உண்டு. அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி உயர்வின் காரணமாகவும், ஊதிய உயர்வின் காரணமாகவும், குடும்பத்தை விட்டு பிரிந்து சென்று பணிபுரிய நேரிடலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**ராகு-கேது சஞ்சாரம்**

பின்னோக்கி நகரும் கிரகங்களான ராகு-கேதுக்கள், உங்கள் வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல வழிகாட்டும். மாதத் தொடக்கத்தில் 8 இல் ராகுவும், 2இல் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து லாபத்தை வரவழைத்துக் கொடுப்பர். பயணங்கள் அதிகரிக்கும். பாசமும், நேசமும் கொண்டவர்களால் வளர்ச்சி கூடும். வழக்குகளில் இருந்த தேக்க நிலை மாறும். 2 இல் கேது இருப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாமல் போகலாம். எனவே வாக்கு கொடுக்கும் முன் யோசிப்பது நல்லது. சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

**கடக - சுக்கிரன் வைகாசி**

16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு நீச்சம்பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்களயோக" த்தை உருவாக்குகிறார். உங்கள் இராசிக்கு 2, 9 இற்கு அதிபதியான சுக்கிரன், லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது நற்பலன்கள் நடைபெறும். குறிப்பாக வருமானம் உயரும்.கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்க நண்பர்கள் உறுதுணைபுரிவர். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவோடு பல நல்ல காரியங்களைச்செய்து முடிப்பீர்கள். ஆபரண சேர்க்கை உண்டு.

**ரிஷப - புதன்**

வைகாசி 18 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.தோள்கொடுத்து உதவ நண்பர்கள் காத்திருப்பர். தனவரவு தாராளமாகும். இனத்தார் பகை மாறும். எதையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். மனதளவில் நினைத்ததை மறுகணமே செய்து முடிக்கும் யோகம் வாய்க்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு அகலும். சேமிப்பு உயர்ந்து உள்ளத்தை மகிழ்விக்கும். பொதுவாழ்வில் இருந்த வீண் பிரச்சினைகள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். தொழிலில் உழைப்பிற்கேற்ற ஆதாயம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. கலைஞர் களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். பெண்களுக்கு பொருளாதாரப் பற்றாக் குறை அகலும். புதிய வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். கணவன் - மனைவி, ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலாட்டு கேட்டு வளர்ந்தவர்கள் அல்ல நாம்; எம் தாயாரின் மரண ஓலங்கள் கேட்டு வளர்ந்தவர்கள் நாம்

## யாழில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகை



(யாழ்ப்பாணம்) முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட உறவுகளுக்கான 14 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டின் பல பக்கங்களிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் யாழ்.இந்துக் கல்லூரியில் முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவு கூர்ந்து பதாகை ஒன்று வாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

"தாலாட்டு கேட்டு வளர்ந்தவர்கள் அல்ல நாம், எம் தாயாரின் மரண ஓலங்களை கேட்டு வளர்ந்தவர்கள் நாம்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு உறவுகளால் பிதிர்கடன் பூசை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு பிதிர்கடன் செய்யும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை சைவத் தமிழ் மன்றம் ஊடாக முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்காக பிதிர்கடன் செய்ய அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அகில இலங்கை சைவத்தமிழ் மன்றத்தின் மத குருக்களால் முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு முள்ளிவாய்க்கால், கப்பலடி கடற்கரையில் பிதிர் கடன் ஆத்ம சாந்தி பூசையில் உயிர் நீத்த உறவுகளின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். (நி-6)

# வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய மண்டலாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர ஆலய மண்டலாபிஷேகம் இன்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 320 | 320 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 150 |
| தக்காளி | 550 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 |
| கோவா | 240 | 250 | 280 |
| கரட் | 200 | 340 | 280 |
| பூசணி | 100 | 80 | 60 |
| புடோல் | 120 | 140 | 120 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 380 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 |
| பாகற்காய் | 400 | 1000 | 350 |
| வெண்டக்காய் | 150 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 300 | 350 |
| பீற்றூட் | 250 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 450 |
| போஞ்சி | 550 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 |
| தேசிக்காய் | 400 | 400 | 380 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 |
| இராசவள்ளி | 340 | 300 | 280 |
| வெங்காயப்பூ | — | 800 | 400 |
| முள்ளங்கி | 80 | 160 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 40 | 25 | 50 |
| ஈரப்பலா | 150 | -- | -- |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2832

பொஸ்கோ




துஷா




சுனி




டியூரா




ஜெகன்




றொஷானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 182





அவன் அச்சமயம் இருந்த இடத்துக்கு உயரமான ஓர் இடத்தில், தொலை தூரம் என்று தோன்றிய தூரத்தில் அது நடந்தது.

கூத்து மேடையின் ஒரு பக்கத்திலிருந்து ஒரு தீவர்த்தி வந்தது. இன்னொரு புறத்துப் பக்கம் படுதாவை நீக்கிக் கொண்டு மற்றொரு தீவர்த்தி வந்தது. தீவர்த்திகள் இரண்டும் நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தன.

ஒரு தீவர்த்தி வெளிச்சத்தில் இரு நெடிய கரிய உருவங்கள் தெரிந்தன. இன்னொரு தீவர்த்தியின் ஒளியில் மற்றும் இரு உருவங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று நெடிய கம்பீரமான உருவம் மற்றொன்று சிறிது குட்டையான மெல்லிய வடிவம். இருதரப்பு உருவங்களும் ஒன்றையொன்று நெருங்கி வந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவன் மேலும் கண் விழிகள் பிதுங்கும்படி உற்றுப் பார்த்து அந்த உருவங்கள் யாருடையவை என்பதை ஒருவாறு தெரிந்து கொண்டான்.

இடது பக்கத்திலிருந்து வந்த இரு உருவங்கள் மதுராந்தகத்தேவரை அழைத்துச் சென்ற கந்தமாறனும் காவலனும் வலது புறத்திலிருந்து வந்த உருவங்கள் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய இளையராணி நந்தினி தேவியும்.

இந்த இரு கோஷ்டியாரும் சந்திக்கும் போது என்ன நடக்கும்? ஏதாவது விபரீதமாக நடக்குமா? அல்லது ஒருவருக்கொருவர் வழி விட்டு விட்டுச் சாவதானமாகப் போய் விடுவார்களா? வந்தியத்தேவன் அந்தப் பரபரப்பில் மூச்சு விடுவதைக் கூட நிறுத்திக் கொண்டு அதனை கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரு கோஷ்டியாரும் சந்தித்தார்கள். அவர்கள் தடுமாறித் தயங்கி நின்றதிலிருந்து இரு சாராருக்கும் அச்சந்திப்பு வியப்பையும் திகைப்பையும் அளித்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் விபரீதம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. பழுவேட்டரையர் கந்தமாறனைப் பார்த்து ஏதோ கேட்டார். அதற்குக் கந்தமாறன் ஏதோ விடை சொன்னான். கேள்வியும் விடையும் என்னவென்பது வந்தியத்தேவனின் காதில் விழவில்லை.

பிறகு, பழுவேட்டரையர் கையினால் சமிக்ஞை செய்து சுரங்க வழியின் படிக்கட்டைச் சுட்டிக்காட்டினார். கந்தமாறன் அவரைப் பணிவுடன் வணங்கினான். வணங்கி விட்டுப் படிக்கட்டில் இறங்கினான். அவனுக்குப் பின் கையில் தீவர்த்தியுடன் வந்த காவலனைப் பார்த்துப் பழுவேட்டரையர் ஏதோ சமிக்ஞை செய்தார். அவனும் மறு மொழி சொல்லாமல் ஒரு கையினால் வாயைப் பொத்திக் கொண்டு வணங்கினான். பிறகு கந்தமாறனைத் தொடர்ந்து படிக்கட்டில் இறங்கினான். பழுவேட்டரையரும் இளையராணியும் இடதுபக்கம் நோக்கிச் சென்றார்கள்.

நிழலாட்டத்தையும் பொம்மலாட்டத்தையும் ஒத்த மேற்கூறிய நிகழ்ச்சிகள் எல்லாம் சில கண நேரத்தில் நடந்து விட்டன. இவ்வளவும் சுரங்க வழியில் இறங்கும் படிக்கட்டின் அருகில் நிகழ்ந்தன என்பதை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான்.

ஆகா! நாம் வழியில் எங்கும் நில்லாமல் இந்த நிலவறையில் வந்து சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! நாம் மட்டும் அந்த இரு கோஷ்டிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டிருந்தால் நம் கதி என்னவாகியிருக்கும்? ஏதோ அந்த மட்டுக்கும் பிழைத்தோம். தப்பித்துக் கொள்ள வழி என்ன? கந்தமாறன் மதுராந்தகத்தேவரை அழைத்து வந்த சுரங்க வழியில் திரும்பிச் செல்கிறான் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி இராணுவ வீரன்



அமெரிக்கா ஒரு காலத்தில் இங்கிலாந்திடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. அமெரிக்க மக்கள், இங்கிலாந்து மக்களிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காகப் போராட்டம் நடத்தினர். அது கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

அமெரிக்க இராணுவப் படை, இங்கிலாந்து இராணுவப் படையுடன் கடுமையாக மோதியது. போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை வந்தது. ஆகவே, இரண்டு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்தனர்.

அச்சமயம் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளில் ஒருவரான இஸ்ரேல் பொட்னாம் என்பவர் இங்கிலாந்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரைச் சந்தித்தார். இருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதம் நடந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அமெரிக்க அதிகாரி, ஆங்கிலேயே அதிகாரியை மிகவும் திட்டி விட்டார். இதைக் கேட்ட ஆங்கில அதிகாரி கொதித்தெழுந்தார்.

“இவ்வளவு தூரம் நீ பேசிவிட்டாய் அல்லவா? நாளை நீ என்னுடன் சண்டைக்கு வர வேண்டும். நீ உன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வா. நான் என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வருகிறேன். இருவரும் துப்பாக்கியால் சண்டை போடுவோம். யார் வெல்கிறார்கள் என்று பார்க்கலாமா?” என்றார்.

இஸ்ரேல் பொட்னாம் இதைக் கேட்டு பதில் எதுவும் பேசவில்லை. அமைதியாக அங்கே கிடந்த மரப் பீப்பாய் ஒன்றின் மேல் உட்கார்ந்திருந்தார். போர்க்களத்தில் இந்த மரப் பீப்பாய்கள் அதிகமாகக் காணப்படும். காரணம், இம்மாதிரிப் பீப்பாய்களில் தான் போருக்குத் தேவையான வெடி மருந்துகள் நிரப்பி வைத்திருப்பர். இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேய அதிகாரி அதிகமாக கோபம் அடைந்தார்.

“அப்படியானால் நீ ஒரு கோழை என்பதை வெளிப்படையாகவே ஒப்புக் கொள்ள வேண்டியதுதானே! மௌனம் ஏன்?” என்று சீண்டினார்.

“நான் உன்னைப் போன்ற கோழை இல்லை. வாய்ச் சொல்லில் வீரம் பேச எனக்குத் தெரியாது. நான் செயல் வீரன். நீ உனக்குச் சாதகமான முறையில் துப்பாக்கிச் சண்டை செய்யலாம் என்று கூறினாய். உனக்குத் துப்பாக்கி சுடுவதில் நல்ல பயிற்சி உண்டு என்பது எனக்குத் தெரியும்.

“ஆகையினால் நீ துப்பாக்கிச் சண்டையைத் தேர்ந்தெடுத்தாய். என் விஷயம் அப்படி இல்லை. எனக்கு துப்பாக்கி சுடுவதில் அத்தனை அனுபவமில்லை. யார் வீரன் என்பதை நிரூபிக்க ஒரு பொதுவான வழிமுறையை உன்னால் சொல்லத் தெரியவில்லையே!”

“ஏன், நீதான் செயல் வீரனாயிற்றே! பொதுவான ஒரு வழியைச் சொல்லேன் பார்க்கலாம்,” என்று குமுறினார் ஆங்கில அதிகாரி.

“சரி! நானே சொல்கிறேன். இங்கே இரண்டு பீப்பாய்கள் இருக்கின்றன. இந்தப் பீப்பாய்கள் எதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதை நீயும் அறிவாய். வெடிமருந்து போட்டு வைக்க உபயோகப்படுத்தும் பீப்பாய்கள் இவை என்பதை நீ மறந்தாலும் நான் உனக்கு நினைவூட்டுகிறேன். இப்போது இந்த இரண்டு பீப்பாய்களிலும் நான் ஒரு துளையை இடுகிறேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்துகொண்டால்போதும். அதனைக்கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம்.
~ ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இறப்பிலும் இழப்பிலும் அரசியல் இலாபம் தேடும்...

திருமண வீட்டுக்குச் சென்றால் மாப்பிள்ளையாக இருக்க வேண்டும். மரண வீட்டுக்குச் சென்றால் இறந்தவராக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றவர்தான் கலைஞர் கருணாநிதி என தமிழகத்தின் அரசியல்வாதி ஒருவர் ஒரு காலத்தில் பேசியதை நினைத்துப் பார்க்கின்றேன்.

அந்த அரசியல்வாதியின் கருத்து கலைஞர் கருணாநிதிக்குப் பொருந்துமோ இல்லையோ நம் தமிழ் அரசியல்வாதிகள் பலருக்கும் பொருந்தும்.

ஆம், அரசியல் என்பது நேர்மைக்கு உரியதன்று.

அரசியலில் ஈடுபடுவதாக இருந்தால், இராஜதந்திரம் தெரிந்திருக்க வேண்டும். மற்றவர்களை ஏமாற்றவும் நம்பவைத்துக் கழுத்தறுக்கவும் கற்றிருக்க வேண்டும்.

இதற்கும் மேலாக, பொய்யான வாக்குறுதிகளை வழங்குவது, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப கதைப்பது எனத் தர்மத்துக்குப் புறம்பான அத்தனையையும் அமுலாக்கத் தெரிந்திருக்க வேண்டும் என்பதாக ஆகிவிட்டது.

இதன்காரணமாக பொதுமக்கள் அரசியலை வெறுக்கின்ற நிலைக்கு வந்து விட்டனர்.

இதில் நம் ஈழத் தமிழர்களின் அரசியல் கலாசாரம் என்பது மிகவும் கேவலப்பட்டு விட்டது.

அதாவது எங்களின் அரசியல் என்பது நினைவேந்தல், ஆர்ப்பாட்டம், அறிக்கை விடுதல் என்ற குறுகிய எல்லைக்குள் அடங்கிக் கிடப்பதுதான் மிகவும் கொடுமையானது.

ஆம், நினைவேந்தல் என்பது மக்கள் தன்னார்வத்துடன் செய்கின்ற நிகழ்வு.

உறவுகளை இழந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தங்கள் உறவுகளை நிச்சயம் நினைவேந்துவர்.

குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது எல்லாத் தமிழ் உறவுகளையும் ஈடுபடுத்துவது.

அங்கு ஒழுங்குபடுத்தல் மற்றும் சில ஏற்பாடுகளைச் செய்தல் என்பதற்காக ஒரு பொதுக்கட்டமைப்பு மட்டுமே தேவையானது.

இருந்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அழைப்பு விடுக்கின்ற அளவில் அரசியல் அநாகரிகம் நம்மிடம் எழுந்து நிற்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தன் பிள்ளையைப் பறிகொடுத்த தாயும் தந்தையும் தங்கள் பிள்ளையைநினைவேந்துவதற்கு நாம் அழைப்பு விடுவது எந்தவகையில் நியாயமாகும்.

அதிலும் நாம் அழைப்பு விட்டதால்தான் இத்தனை மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவிடத்துக்கு வந்தனர் என்று நினைப்பது இவர்களின் கற்பனை நோய்க்கு எல்லை இல்லை என்பதாக இருக்கிறது.

ஆக, தமிழ் அரசியல்வாதிகள் எல்லாவற்றிலும் அரசியல் இலாபம் தேடுவதற்கு முண்டியடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

ஏனெனில் நடிப்பு எது? நாடகம் எது? கபடத்தனம் எது? என்பதை நம் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

ஏனெனில் அவர்கள் இந்த மண்ணின் விடுதலைக்காக தங்களின் உதிரத்தை ஆகுதியாக்கியவர்கள்.

எனவே நிஜத்துடன் வாழுகின்ற மக்களுக்கு; அரசியல் இலாபத்துக்கான நடிப்பு எது என்பதை இனங்காண முடியும்.

ஆகையால் எல்லா இடத்திலும் அரசியல் இலாபம் தேட நினைத்து உள்ளதையும் கெடுக்காமல் இருப்பது நல்லது.

# கடன் மறு சீரமைப்பு என்ற போர்வையில் அரசு மக்களை முட்டாளாக்குகின்றது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் அரசாங்கம் மக்களை மீண்டும் முட்டாளாக்கிவருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை வங்கி பிரதிநிதிகள் குழுவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போதைய அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு போர்வையில் அது குறித்து மும்முரமாக பேசி இந்நாட்டு மக்களை மீண்டும் முட்டாளாக்கி ஏமாற்றி வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை பாராளுமன்றத்திற்கும் நாட்டிற்கும் சமர்ப்பிக்குமாறு தான் உள்ளிட்டவர்கள் கோரியதாகவும் அவ்வாறான உடன்படிக்கைக்கு வருவதற்கு முன்னர் அனைத்து அரசியல் தரப்புகளுடனும் கலந்துரையாடி நிலைபேறான நிரந்தர தீர்வை எட்டுவது அவசியமாகும் எனவும்,நமது நாட்டின் ஆட்சியாளர்கள் சர்வதேச நாணய நிதியத்திற்கு தாமதமாகச் சென்று மிகவும் தோல்வியுற்ற பேச்சுவார்த்தைக்கும் ஒப்பந்தத்திலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் இதன் பெறுபேறுகளை மக்கள் தற்போது அனுபவித்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ஸ்மார்ட் கலந்துரையாடல் மற்றும் சிறந்த உடன்பாட்டை எட்டுமாறு பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தாலும் தற்போதைய அரசாங்கம் அது எதனையும் கருத்தில் கொள்ளவில்லை எனவும் தாம் நன்றாகச் செய்வதாக கூறி தம்பட்டமடித்துச் செயற்பட்டதாகவும் அதன் பாதகமான விளைவுகளை மக்கள் அனுபவிக்க நேர்ந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளகக் கடன் மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டால் பொருளாதாரம், வங்கிக் கட்டமைப்பு மற்றும் 220 இலட்சம் பேரும் நிர்க்கதியாகி நாடு அழிந்துவிடும் என்றும் இது அரசாங்கத்தின் கொள்கையாக அமையக் கூடாது என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு பல்வேறு விடயங்களை மக்களுக்கு முன் வைத்து அரசாங்கம் செயற்பட்டால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் மக்கள் சக்தியின் கீழ் எழுவோம் எனவும் தெரிவித்தார். (ம-7,9)

## 4 சேவைகள் அத்தியாவசியம் வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மின்சாரம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம், சுகாதாரத் துறை ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரது கையொப்பத்துடன் நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் இரண்டாம் சரத்திற்கு அமைய ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் கீழ் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,9)

## 27 சத வீதத்தால் மின் கட்டணத்தை குறைக்க முடியும்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை 27 வீதத்தால் குறைக்கும் சாத்தியம் காணப்படுவதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

எனினும் இலங்கை மின்சாரசபை உண்மைச் செலவுத் தரவுகளை மறைத்து மின்கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்கும் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளது.

உண்மையான செலவுக் குறைப்புடன் ஒப்பிடும்போது மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கு சரியான தரவுகளை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் போலியான தரவுகளைக் காண்பித்து 66 சதவீதம் கட்டணம் உயர்த்தப்பட்டது. உண்மையில் அப்போது 35 சதவீதம் மட்டுமே கட்டணத்தை உயர்த்தியிருக்க வேண்டும். அன்று இலங்கை மின்சார சபையினால் மதிப்பிடப்பட்ட மின்சாரத் தேவையானது 16,550 ஜிகா வாட்டாக இருந்தது. இந்த ஆண்டு மின்சாரத் தேவை 15,050 ஜிகா வாட் மணிநேரமாக மட்டுமே இருக்கும் என்றார். (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** மாங்குளம் பாடசாலையடி **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக் குளம் **மன்னார் பிரதேசத்தில்** எல்லிமோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 7,800 ஆசிரியர்களுக்கு புதிதாக நியமனம்

### கல்வி அமைச்சர் சுசில்

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் சுமார் 7800 ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி புதிய நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி பொது சாதாரண தர பரீட்சையில் உயர் சித்தியுடன் சித்தியடைந்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் உயர்தர கல்விக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய அமைச்சர் இதனை தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் அடுத்த ஆண்டு கல்வி பொது சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் இரண்டையும் ஒரே வருடத்தில் நடத்தும் வகையில் பரீட்சை அட்டவணை புதுப்பிக்கப்படும்.

எதிர்காலத்தில் விஞ்ஞானம் போன்ற ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடப் பிரிவுகளுக்காக 35 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளை தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7,9)

## ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்தது

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 299.21 ரூபாவாகவும், விற்பனை விலை 312.37 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 302.42 ரூபாவாகவும் விற்பனை விலை 316.18 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நீண்ட இடைவெளியின் பின்னர் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 300 ரூபாவை விடவும் குறைவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மத்திய வங்கியின் தரவுகளின் படி இறுதியாக 2022 ஏப்ரல் 6 ஆம் திகதி 300 ரூபாவை விட குறைவாக அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி பதிவாகியிருந்ததாக குறித்த திகதியில் டொலரின் கொள்வனவுப் பெறுமதி 298.10 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 308.49 ரூபாவாகவும் பதிவாகியிருந்ததாக மத்திய வங்கியின் தரவுகள் காட்டுகின்றன. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மீன் பிடித்தொழில் வரலாறு


## தொகுப்பு- I

13


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






ஒரு படகால் இயக்கப்படும் சுருக்கு வலை





1.வலையை கடலில் போடுதல் 2. மீனைச் சுற்றி வளைத்தல் 3. வலையை சுருக்கி இழுத்தல் 4. இழுத்து படகில் ஏற்றல்


சுருக்கு வலையில் அகப்படும் மீன்கள், சின்னதில் இருந்து பெரியது வரை வளமாக மாட்டிக் கொள்கிறது. இவ்வகையான வலை கொண்டு பிடிப்பது உலகில் விரும்பத்தகாத ஒன்று. கடலில் மிதந்து வாழும் நுண்ணுயிர் தாவரங்கள், இவ்வலை வீச்சால் அழிந்தும் போவதால் இது கடலின் அடிப்படை உற்பத்தியை இல்லாமலே ஒழித்தும்விடுகிறது.


### இழுவை வலை


உலகில் பிரதான மீன்பிடிமுறைகளில் முக்கியமான ஒன்றாகும். இழுவை வலை (படம்-R) ஒரு இயங்குநிலைவலையாகும். கண்டமேடைப் பகுதிகளில் இழுவைக் கப்பல்கள் மூலம் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையிலும் வட பகுதியில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் வலையின் பிரதான பாகங்களாக புனல் போன்ற வடிவமைப்புடைய மடி. சிறகுப் பகுதி. கீழ்வலை, மேல் வலை, கதவுகள். நீளமான கயிறுகள் காணப்படுகின்றன. மடியின் வாய் நன்றாக திறக்கும் வண்ணம் இரு சிறகுப் பகுதிகளிலும் ஒவ்வொரு கதவுகள் பொருத்தப்பட்டு கதவுகளிலிருந்து கயிறுகள் நீளமாகப் படகுடன் பொருத்தப்பட்டு படகினால் சமுத்திரப் பகுதிகளில் இழுத்துச் செல்லப்படுகின்றன. கயிற்றின் நீளமானது இவ்வலை இழுக்கப்படுகின்ற இடத்தின் கடலின் ஆழத்தின் 5 மடங்காக இருத்தல் வேண்டும்.


வலை இயந்திரப் படகின் உதவியுடன் இழுத்துச் செல்லப்படும் போது இழுத்துச் செல்லப்படும் பகுதிகளில் உள்ள மீன்கள் மடியினுள் அகப்படுகின்றன. இத்தொழில் கடலின்கீழ் தரை அமைப்பில் தங்கியுள்ளது. வடபகுதியில் அமைந்துள்ள பேதுரு மேடை இத் தொழிலுக்கு தலை சிறந்த இடமாகும். பேசாலை, தலைமன்னார். இராமேஸ்வரம், கச்சதீவு பகுதிகளும் சிறப்பான பகுதிகளாகவுள்ளன. இழுவை மூலம் அடித்தளப் பகுதியில் காணப்படும் திருக்கை. நண்டு. கடல் அட்டை, இறால் போன்றவைகளும். காரல், குறுமுட்டி, கத்தாளை, வாவல் மீன்களும் பிடிக்கப்படுகின்றன. கடலின் அடிப்பகுதியில் இழுத்துச் செல்லப்படும் போது இது படுப்பு இழு வலை எனப்படும். இதனால் சில சமயங்களின் கடல் அடிப்பகுதிக்குப் பாதிப்பு ஏற்படும். இவ்வலையானது ஒன்று அல்லது இரண்டு கலன்கள் மூலமாக இழுக்கப்படலாம்.




கரைவலை, இந்நாட்டில் புராதனந் தொட்டே வழக்கில் காணப்பட்டதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான மீன் பிடித் தொழில்சார் ஓர் உபகரணமாகும். முன்பு மொத்த மீன் உற்பத்தியில் சுமார் 60% த்தைக் கரைவலை வாயிலாகப் பெறக்கூடியதாக இருந்தது. எனவே ஆரம்ப காலத்தில் அது வொரு கணிசமான பங்களிப்பினை நல்கியதெனலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலச்சந்திரன்...

பாலசந்திரன் இறந்து கிடந்த காட்சியும் அவரின் அப்பாவித்தனமான இறுதி தருணங்களும் என்றும் தமிழரின் நெஞ்சில் நிறைந்திருக்கும்.

அப்படியிருக்கையில் நேற்று முள்ளிவாய்க்காலில் பாலசந்திரனின் இறுதித் தருணங்களை ஒரு சிறுவன் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

பாலசந்திரனை போன்று உடையணிந்து, அவர் இறுதியாக அமர்ந்திருந்ததை போன்று ஒரு இடத்தில் அமர்ந்து இருந்தார்.

இந்த காட்சி அப்படியே பாலசந்திரனை பிரதிபலிப்பதாக இருந்தமையால் அங்கிருந்த மக்கள் அனைவரும் அந்த சிறுவனை பார்த்து, மெய் சிலிர்த்து போனதுடன் பலர் கண்ணீர் சிந்தியுள்ளனர். (ம-7,9)

## திருமலையில்...

யும் ஏற்பாடு செய்வதற்கு எதிராக, இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடையுத்தரவில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 13 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ம-7,9)

## கிளிநொச்சி...

படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அதற்கு எதிராக பிரதேச மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் சிலர் நேற்று ஒன்று திரண்டு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் குறித்த பணிகளுக்கு செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்லியல் சின்னங்கள் அமைந்துள்ளதாக தெரிவித்து நேற்றைய தினம் குறித்த பகுதியில் ஆய்வுகளுக்காக தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அங்கு செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் கிராம மக்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் கிராம மட்ட அமைப்புகள் என பலர் நேற்று தமது எதிர்ப்பை வெளியிடும் வகையில் ஆலயத்திற்கு முன்பாக ஒன்றுகூடி யிருந்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.சந்திரகுமார் மற்றும் பொதுமக்கள் குடிசார் அமைப்புக்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். (ம-7,9)

## சமாதான புறாக்...

முள்ளிவாய்க்காலில் பயங்கரவாத யுத்தத்தால் உயிரிழந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்காக வவுனியாவில் அஞ்சலி நிகழ்வு ஒன்று இடம்பெற்றதுடன், சமாதான புறாக்களும் பறக்க விடப்பட்டன.

வவுனியா மாநகர சபை மைதானத்தில் நேற்று மாலை 5.30 மணிக்கு வன்னி மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

2009ஆம் ஆண்டு கொடிய யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒரு தாய் பிள்ளைகளாக ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். கொடிய யுத்தத்தால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பலர் இறந்துள்ளார்கள். அவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி பௌத்த பிக்குகள், இந்து மதகுருமார், கத்தோலிக்க மதகுருமார், இஸ்லாமிய மதகுருமார் ஆகியோரின் ஆசிகளுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதான சுடரினை மதத் தலைவர்களும் அதிதிகளும் ஒன்றிணைந்து ஏற்றிவைக்க, ஏனைய சுடர்களை பொதுமக்கள் ஏற்றி வைத்ததுடன், இறந்தவர்கள் நினைவாக தென்னம் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் வலியுறுத்தி மதத்தலைவர்களால் புறாக்களும் பறக்கவிடப்பட்டன. (ம-7,9)

## முள்ளிவாய்க்...

தமிழ் இனப்படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முள்ளிவாய்க்கால் முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு, சரியாக காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகியது.

உயிர்நீத்த உறவுகளுக்கு அக வணக்கம் செலுத்தப்பட்டு, அதனை அடுத்து பொதுச்சுடரேற்றப்பட்டது. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தனது குடும்பத்தில் 13 பேரை இழந்த மன்னாரைச் சேர்ந்த தாயார் ஒருவர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

அதேவேளை சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென்கைலாய ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார் அவர்களால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அத்தோடு இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற உறவுகள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், யாழ்.பல்கலைக்கழக மணவர் ஒன்றியத்தினர், முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களுடைய உறவினர்கள் என பெருந்திரளானவர்களின் பங்குபற்றலுடன் உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ம-7,9)

## 'வலி சுமந்த...

களுக்கு மட்டக்களப்பு கிரான் பிள்ளையார் ஆலய முன்றில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஆலய குரு மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு உயிர் நீத்தவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

மேலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு மட்டக்களப்பு கிரான் பிள்ளையார் ஆலய முன்றில் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், மட்டக்களப்பு மன்றேசா தியான வளாகத்திலும் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

குறித்த நினைவேந்தலை மட்டக்களப்பு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் இந்து, இஸ்லாம், மற்றும், கிறிஸ்தவ மக்கள் ஒன்றிணைந்து கலந்து கொண்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தியுள்ளதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பகிரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கிழக்கு பல்கலைக்கழகம், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றிலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது (ம-7,9)

## கிணற்றில்...

பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - கல்விளான் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து யுவதி ஒருவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த இராசதுரை நிரோஜா (வயது - 24) என்ற பெண், அவரது வீட்டில் இருந்து 300 மீற்றர் தொலைவில் உள்ள கிணறு ஒன்றில் விழுந்துள்ளார்.

இதனையடுத்து அப்பகுதியில் உள்ளவர்கள் அவரை கிணற்றில் இருந்து தூக்கி சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,104)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1573
விருச்சிகம் 9 6 2 3 5 0

தன நிதானய
திகதி - 2023.05.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1148
F 11 12 47 75

கொவிசெத
திகதி 2023.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 3360
J 48 54 62 69

மெகா பவர்
திகதி 18/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1466
W 08 16 25 27 43

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 427
கன்னி 09 14 23 28 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/05/18
சீட்டிழுப்பு இலக்கம் 5118
B 2 6 3 9 2 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2092
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.05.18
தினம் வியாழக்கிழமை
V 03 21 37 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,755,240/-

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.18
வெற்றி வாரம்: 4253
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,561,315.00
18 21 32 41 F

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,764,975/-
திகதி 2023-05-18
வெற்றி வாரம் 3804
08 11 21 30
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,262,700/-

கப்ருக
T 27 03 14 37 64
1268
2023.05.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 330,797,233.00

சம்பத வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 594
திகதி 2023-05-18
W 07 31 38 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 19,852,272.00
DLB DEVELOPMENT LOTTERIES
Web: www.dlb.lk

அட கோடீபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 1918
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.50,792,858.40
சீட்டிழுப்பு திகதி : 2023.05.18
26 35 37 68 T

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயுதப் போராட்டத்தால் உயிரிழந்த தமிழர்கள் குறித்து ஆழ்ந்து சிந்திக்கின்றோம்

## முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு கனேடிய பிரதமர்



(ஒற்றோவா)

இலங்கையில், 14 ஆண்டுகளுக்கு முன்பு முடிவுக்கு வந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயர்நிறைந்த உயிரிழப்புக்கள் குறித்து இன்று நாம் ஆழ்ந்து சிந்திக்கின்றோம் என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும், முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட சம்பவங்களில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் உயிரிழந்து, மேலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம் பெயர்க்கப்பட்டார்கள்.

அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட வேதனையுடன் வாழும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்தோர் மற்றும் அவர்களது அன்புக்குரியோர் ஆகியோரை நாம் இன்று நினைவில் கொள்கின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-7.9)


### காவலாளி தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள வீடு ஒன்றுக்கு இரவு நேரக் காவலாளி தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**076 097 3127**

### IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes, First Class (Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
(15559)

### தேசிய லொத்தர் சபை முகவர் பதவி விண்ணப்பம் கோரல்

வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தேசிய லொத்தர் சபை முகவர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
(15553)

**076 105 6343**

### குத்தகைக்கு தேவை

தனியார் கம்பனிக்கு வான்/கார் குத்தகைக்குத் தேவை.

தகுந்த பெறுமானம் வழங்கப்படும்

**077 971 5379**

### VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்
(15537)

077 544 8503

### 2022 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு — ஆசிரியர் RS. சந்திரன்

காலம்: மே 20, 21 சனி, ஞாயிற்றுக்கிழமை (காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள் :
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

(15509)

றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம்

### தமிழ்ப் பாட நிறைவுக் கருத்தரங்கு

இம்முறை க.பொ.த சா/தர 2023 (2022) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு எதிர்பார்க்கை வினாக்களை முழுவதுமாக உள்ளடக்கிய நேரடிக் கருத்தரங்கு
கற்பித்தல் சாதனம் :- Multimedia projector
காலம் - 20.05.2023 (சனிக்கிழமை)
காலை 8 மணி தொடக்கம் - 12 மணி வரை
கட்டணம் - 500/-
இடம் - TECHNA Technical Institute,
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
ஆசிரியர் - தமிழ்ச்சுடர் திரு க.மு நித்தி
கருத்தரங்கு நடைபெறும் நாளில் அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(15545)

தொடர்பு - 077 105 1015

### உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6580)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

### அலுவலகம் தேவை

Accountancy நிறுவனமொன்றிற்கு யாழ் நகருக்கு அண்மையில் போக்குவரத்துக்கு இலகுவான சூழலில் 1000 - 2000 சதுர அடி கொண்ட அலுவலக இடம் தேவை.
(15558)

தொடர்புகளுக்கு
விதுரன் - 077 040 1555

### VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-6580)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**



- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் ரூபாய் (1000,000/=).

076 911 9371, 076 739 0413
077 874 8135


### அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



உயர்திரு. **வேலுப்பிள்ளை மகேந்திரன்**
(அதிபர் - யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்)

பாடசாலைகள் பல உம் ஆசிரிய சேவையையும் அதிபர் சேவையையும் வியந்து பாராட்டியமை உம் பணிக்கு கிடைத்த மாபெரும் அங்கீகாரம். ஓய்வுக் காலத்திலும் நற்பணியும் ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் மன மகிழ்ச்சியும் வாய்க்கப்பெற மனமுவந்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :
கோவியம்பதி, கொற்றாவத்தை. — பி.கிருஷ்ணானந்தன், கி.சந்திரா
(15557)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.